அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
முதன்மை தலைமை பொறியாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை
சென்னை – 600 003

---

கடித எண்.: பி3/11666/2017 **தேதி**: 8.02.2018

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – பழைய நில அளவை எண்.50 (பகுதி), நகர நில அளவை எண்.2, பகுதி எண்.4, பெரிய கூடல் கிராமம் மற்றும் பழைய நில அளவை எண்.1 (பகுதி), நகர நில அளவை எண்.24/13, பகுதி எண்.12, அயனாவரம் கிராமம், மனை எண்.393, பழைய கதவு எண்.12, புதிய கதவு எண்.18, 'K' பிளாக், முதலாவது பிரதான சாலை, அண்ணாநகர் கிழக்கு, சென்னை–102ல் வாகன நிறுத்து தளம் + மூன்று தளங்களுடன் 3 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டிடம் – திருத்திய திட்ட அனுமதி – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்பு கட்டிடப் பிரிவு பிரிவு எண்.BN/2017/000550 நாள் 9.8.2017அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண். 303, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 30.12.2013 (த.நா.அ. அறிக்கை வெளியீட்டு நாள் 29.01.2014).
3. அரசாணை (பல்வகை) எண்.85, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 16.5.2017.
4. தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கடித எண்.6188/UD-4(3)/2017-8 நாள் 13.6.2017.
5. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 30.11.2017.
6. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 8.1.2018, 19.1.2018 மற்றும் 2.2.2018.
7. ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட திட்ட அனுமதி எண்.B/Spl.Bldg./72/2017 கடித எண்.B3/9468/2016 நாள் 15.3.2017.

*******

பழைய நில அளவை எண்.50 (பகுதி), நகர நில அளவை எண்.2, பகுதி எண்.4, பெரிய கூடல் கிராமம் மற்றும் பழைய நில அளவை எண்.1 (பகுதி), நகர நில அளவை எண்.24/13, பகுதி எண்.12, அயனாவரம் கிராமம், மனை எண்.393, பழைய கதவு எண்.12, புதிய கதவு எண்.18, 'K' பிளாக், முதலாவது பிரதான சாலை, அண்ணாநகர் கிழக்கு, சென்னை–102ல் வாகன நிறுத்து தளம் + மூன்று தளங்களுடன் 3 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு உபயோகம் கொண்ட கட்டிடத்தை கட்டுவதற்கு, பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–5ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு திருத்திய திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

2(அ). விண்ணப்பதாரர் பார்வை –5இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, ரசீது எண் B006374 நாள் 8.1.2018–ல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ. 200/– | இரசீது எண் B 006374 நாள் 8.1.2018 |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ. 1,120/– | |
| வரன்முறைக் கட்டணம் | இல்லை | |
| திறந்தவெளிக் கட்டணம் | இல்லை | |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ரூ. 4,000/– | |
| கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | இல்லை | |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | இல்லை | |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | இல்லை | |
| மொத்தம் | ரூ. 5,320/– | |

2(ஆ). இந்த திட்ட அனுமதியானது பார்வை–7ன் வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கான திருத்திய திட்ட அனுமதியாகும். எனவே, பார்வை–7ன்வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதி இதனால் ரத்து செய்யப்படுகிறது. மேலும், பார்வை–7ன்வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதியின்போது கீழ்கண்ட கட்டணங்கள் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ.15,410/– | இரசீது எண் B 003730 நாள் 1.3.2017 |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ. 1,970/– | |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ரூ. 2,64,000/– | |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ.10,000/– | |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ. 3,10,040/– | |
| ஊக்கத்தளப்பரப்புக் கட்டணம் | ரூ. 1,02,480/– | |
| மொத்தம் | ரூ. 7,03,900/– | |

மேற்கூரிய கட்டணங்கள் அனைத்தும் தற்போதைய திருத்திய திட்ட அனுமதி கட்டணத்தில் சரி செய்யப்பட்டு மீதி தொகை வசூலிக்கப்பட்டது.

3. (அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணமாக ரூ.1,59,720/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து எழு நூற்று இருபது மட்டும்) ரசீது எண் B003730 நாள் 1.3.2017ல் பார்வை–7ன்வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்காக பெறப்பட்டது. மேலும், திருத்திய திட்ட அனுமதிக்காக ரூ.19,840/– (ரூபாய் பத்தொன்பதாயிரத்து எட்டு நூற்று நாற்பது மட்டும்) ரசீது எண் B006374 நாள் 8.1.2018ல் பெறப்பட்டது.

(ஆ) கழிவு நீரகற்று அமைப்பைப் பொருத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாக சமர்ப்பித்து உரிய அனுமதியை பெற்ற பின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

(இ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும் சமையலுக்காகவும் மட்டும் நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்ற பிறகு, குடிநீர் இணைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும். அனைத்து கிணறுகளும், மேல் நிலைத்தொட்டிகளும் கழிவு நீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதார முறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழை நீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சி விதிமுறைகள் விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும், அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

5. எண்.பி/சிறப்புக் கட்டிடம்/24/2018 நாள் 8.2.2018 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 8.2.2018 இருந்து 7.2.2023 வரை செல்லுபடியாகும் (Permit No.11833).

6. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் பெருநகர சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

7. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

8. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

பி3/11666/2017

9. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

S. Gnaneswari 12/2/18

உறுப்பினர்–செயலருக்காக.

12/02/18

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:
1. திரு எ.வி.எஸ்.ராஜா மற்றும் திருமதி ராதா ராஜா
   எண்.AK-28 முதல் 30 வரை, டாஸ் என்கிளேவ்
   10வது பிரதான சாலை விரிவாக்கம்,
   அண்ணாநகர், சென்னை – 600 040.

2. உறுப்பினர்
   உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

3. வருமானவரி ஆணையர்
   168, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

4. துணைதிட்ட அமைப்பாளர்
   செயலாக்கப்பிரிவு (வடக்கு),
   செ.பெ.வ.குழுமம், சென்னை– 600 008

5. மேலாண்மை இயக்குநர்
   செ.பெ.குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்,
   சென்னை – 600 002